P.R.NO: 442

## ஒப்பந்தப்புள்ளி முறை குறித்து

## அரசு அறிவிப்பு (14-7-2007)

அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள், நற்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்கான கொள்முதல், வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், 1998 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை தி.மு.க. அரசு இயற்றியது. இதனை மேலும் செம்மைப்படுத்தி, ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலமாக பெறுவதற்கு வகைசெய்யும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை (e-tendering) கழக அரசு இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளதை அனைவரும் அறிவர். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இந்தப் புதிய நடைமுறையின்படி, தமிழ்நாடு அரசு மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில், 1.7.2007 முதல் இலவசமாகக் கிடைத்திட ஆணையிடப்பட்டு, அவ்வாறே ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் கிடைத்து வருகின்றன. இவற்றை ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் எவ்விதத் தடையுமின்றி மேற்கண்ட இணையதள முகவரியில் இலவசமாகப் பெற்று, ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்கலாம். ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களைப் பெறுவதிலோ அல்லது அவற்றைப் பூர்த்தி செய்து அளிப்பதிலோ ஏதேனும் தடைகள் மற்றும் இடையூறுகள் இருப்பின், அவற்றைக் களைவதற்கும், முறையாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும்

முதலமைச்சரின் செயலாளர் (கண்காணிப்பு),<br>
முதலமைச்சர் அலுவலகம்,<br>
தலைமைச் செயலகம்,<br>
சென்னை–600 009.

என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Issued By: DIPR, Chennai-9